13.11.2017

தி இந்து

தமிழால் இணைவோம்

# சென்னைக்கு மித மழையா? கனமழையா?- தமிழ்நாடு வெதர்மேன் பதிவு



மேகக்கூட்டங்கள் போக்கு காட்டுவதால் காற்றின் திசையை வைத்து தான் சென்னைக்கு மித மழையா ? கனமழையா? என்பதை அறிய முடியும். இது குறித்து தற்போதைய நிலவரத்தை தமிழ்நாடு வெதர்மேன் முகநூலில் பதிவிட்டுள்ளார்.

அவரது முக நூல் பதிவு:

“வடகிழக்கு பருவமழை குறித்த அறிவிப்பு

கனமழையா? அல்லது நின்று ‘விளையாடும்’ மழையா?

சென்னை நகர்புறப்பகுதி முழுவதையும் மேகக்கூட்டங்கள் பரவி நிதானமான மழையை பெய்ய இருக்கிறது. மிகவும் அடர்த்தியான , பெரிய மேகக்கூட்டம் சென்னைக்கு அருகே வருகிறதா ? என்பதை பொறுத்திருந்து பார்ப்பது அவசியம். ஒருவேளை வராவிட்டால், இந்த மிதமான மழை மட்டும் நமக்கு கிடைக்கும்.

சென்னைக்கு அருகே மிகவும் அடர்த்தியான , தீவிரமான மேகக்கூட்டங்கள் வந்துவிட்டன. காற்று இல்லாத , மிதமாகப் பெய்யும் மழை பெய்யும். இதற்கிடையே

மழைக்கு சாதகமான வெப்பநிலை சென்னைக்கு அருகே உருவானால் , குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதிக்குள் சுழன்று கொண்டு இருந்த மேகக்கூட்டங்கள் சென்னைக்கு மேலே பரவி கனமழையை கொடுக்கும்.

ஒருவேளை அந்த மேகக்கூட்டம் சென்னையைவிட்டு விலகினால் , நமக்கு மிதமான , மிதமான மழை மட்டுமே கிடைக்கும். என்னுடைய அடுத்த பதிவு என்பது மழை எப்படி பெய்யும்? என்பதைக் குறிப்பிட்டு இருக்கும்.

அதாவது, நமக்கு மிதமான மழை கிடைக்குமா ?அல்லது, கனமழை இருக்குமா ? என்பதை அடுத்த பதிவில் உறுதியாகக் கூறிவிடுவேன்”.

இவ்வாறு தமிழ்நாடு வெதர்மேன் பிரதீப் ஜான் சற்றுமுன் பதிவிட்டுள்ளார்.

## பொங்கல் வரை சின்ன வெங்காயத்தின் விலை குறைய வாய்ப்பில்லை: கிலோ ரூ.180 ஆக உயர்வு



பண்ருட்டி ரத்தினம்பிள்ளை மார்க்கெட்டில் காய்கறி வாங்கும் பொதுமக்கள். - படம்: என்.முருகவேல்.



காய்கறி மொத்த வியாபாரி பாஸ்கர்.

சின்னவெங்காயத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பொங்கல் வரை விலை குறைய வாய்ப்பில்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

அனைத்துக் குடும்பங்களிலும் வெங்காயமும், தக்காளியும் சமையல் அறையில் முக்கிய இடத்தை பிடித்துள்ளன. இவைகளின்றி உணவு சமைத்தால் முழு திருப்தி ஏற்படாது. பல வீடுகளில் இவைகளின்றி உணவே தயாரிக்க முடியாது. அதிலும் சிறிய வெங்காயத்தின் சமைத்தால், அதன் சுவையே தனி.

அத்தகைய சிறிய வெங்காயம் தமிழகத்தின் தென் மாவட்டங்களான தேனி , கம்பம், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு , தர்மபுரி,

சேலம், அரியலூர், பெரம்பலூர், பல்லடம், திருப்பூர், தலைவாசல் போன்ற பகுதிகளில் அதிக அளவு விளைகிறது.

கர்நாடகாவில் மைசூர் , சாம்ராஜ் நகர் , கொள்ளேகால், நஞ்சன்கோடு ஆகிய பகுதிகளில், சிறிய வெங்காயம் பெருமளவு கிடைக்கும்.பெரிய வெங்காயம் , வட மாநிலங்கலான மகாராஷ்டிரா , மத்தியப் பிரதேசம் , ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் கிடைக்கும். சின்னவெங்காயம் கடந்த 3 மாதங்களாக ஏறுமுகத்திலேயே இருந்துவருகிறது. கடந்த செப்டம்பர் மாதம் வரை ரூ. 80 லிருந்து 100 வரை விற்பனை செய்யப்பட்ட சின்னவெங்காயம் கடந்த சில வாரங்களாக ரூ. 150 முதல் 180 வரை நீடிக்கிறது.

இதனால் காய்கறி சந்தைகளிலும் சின்ன வெங்காய விற்பனை சொற்ப அளவிலேயே விற்பனை செய்யப்படுகிறது. அதற்கு மாற்றாக பல்லாரி எனப்படும் பெரிய வெங்காயத்தைத் தான் அனைத்து வியாபாரிகளும் விற்பனை செய்கின்றனர்.

**விளைச்சல் பாதிப்பு**

இதுகுறித்து பண்ருட்டி காய்கறி சந்தை மொத்த வியபாரி பாஸ்கர் என்பவர் கூறுகையில், “சின்ன வெங்காயத்தின் விளைச்சல் குறைந்துள்ளதால் , அவை விற்பனைக்கு வரவில்லை. தற்போது சின்னவெங்காயம் ஒரு கிலோ ரூ. 150 முதல் 180 வரை விற்பனை செய்யப்படுகிறது. எனவே மக்கள் அவ்வளவு விலை கொடுத்து வாங்கத் தயாரில்லை. கர்நாடாகவில் பெய்த மழை காரணாக சின்ன வெங்காயத்தின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சின்ன வெங்காயத்தின் வரத்தும் குறைந்து 10 லாரிகளில் வந்திறங்கிய சின்ன வெங்காயம் இன்று ஒரு லாரியில் பாதியளவுக்கு கூட வருவதில்லை.

பெரம்பலூர் மற்றும் தலைவாசல் பகுதிகளில் இப்போது தான் விதைக்கத் துவங்கியுள்ளனர்.எனவே அவை அறுவடை முடிந்து மார்க்கெட்டுக்கு வர 3 மாதங்களாகலாம். பொங்கல் பண்டிகை வரை சின்ன வெங்காயத்தின் விலை குறைய வாய்ப்பில்லை. இதே போல் ஒரு கிலோ தக்காளி ரூ. 50-க்கும், கேரட் ரூ. 60-க்கும், பழைய இஞ்சி ரூ. 70-க்கும் விற்பனையாகிறது ” என்றார். பண்ருட்டி ரத்தினம்பிள்ளை காய்கறி மார்க்கெட்டுக்கு வந்திருந்த சிலர் , “வெங்காயமும், தக்காளியும் இல்லாமல் சமைக்க முடியாது. ஆனால் இவை இரண்டும் தொடர்ந்து உச்சத்தில் இருப்பதால் , அவைகளின்றி உணவு சமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவற்றின் விலைகளை குறைக்க அரசு முயற்சி மேற்கொள்ளவேண்டும்” என்றனர்.

## கடலோர மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மழை வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்



வடகிழக்கு பருவமழையை ஒட்டி வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக அடுத்த இரு தினங்களுக்கு வட கடலோர மாவட்டங்களில் மிதமான மழைக்கும் சில நேரம் கன மழைக்கும் வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய இயக்குனர் பாலச்சந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வடகிழக்குப் பருவமழை தொடங்கியதை அடுத்து தென் மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி நிலை கொண்டுள்ளது. அது வட திசையில் நகர்வதால் இன்னும் இரண்டு நாளில் மழை படிப்படியாக குறையும்.

அடுத்த இரண்டு தினங்களில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட வட கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுவை கடலோரப் பகுதிகளில் ஒரு சில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னை , காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழைக்கும் வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புற நகரை பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில முறை மழை பெய்யும், சமயங்களில் சற்று பலத்த மழையாக இருக்கக்கூடும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதனிடையே தமிழ்நாடு வெதர்மேன் பதிவில் இரண்டு விதமாக வானிலை மாற வாய்ப்பு உள்ளது என பதிவிட்டுள்ளார்.

அவரது முகநூல் பதிவில் கூறியிருப்பதாவது:

சென்னை மற்றும் அதனைச் சுற்றி இருக்கும் மாவட்டம் குறிப்பாக திருவள்ளூரில் இன்று பகல்நேரத்திலும் இடைவெளி விட்டு மழை பெய்யக்கூடும். அது நாம் அலுவலகம் செல்லும் பகல்நேரத்தில் கூட இருக்கலாம்.

மேகக்கூட்டங்கள் சென்னைக்கு அருகே எப்படி உருவாகிறது என்று இன்று மாலை அல்லது இரவுதான் தெரியும். எப்படி நகர்கிறது என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம். மிக கனமழைக்கு வாய்ப்பு இருக்கிறது என்று இப்போதே கூறவில்லை.

சென்னை மீது மேகக்கூட்டங்கள் சரியாகப் பரவி , காற்றும் அதற்கு ஏற்றார்போல் வீசினால், நமக்கு இன்று மாலை அல்லது இரவு மிக கனமழை பெய்ய வாய்ப்பு உண்டு. அதேசமயம், வடதிசை நோக்கி காற்று திரும்பும் பட்சத்தில் கனமழையை நாம் இழக்கக்கூடும், லேசான மழை மட்டுமே கிடைக்கும். ஆதலால் , மேகங்கள் எப்படி கூடுகின்றன என்று பார்க்க மாலைவரை காத்திருப்போம். இவ்வாறு பிரதீப் ஜான் பதிவிட்டுள்ளார்.

ஆகவே மேகம் காற்றின் வேகத்தில் திரும்புவதை ஓட்டி மழைக்கு வாய்ப்பு உள்ளது.